TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8213012

1. District மாவட்டம் : Vellore PS: காவல்நிலையம் Vigilance & Anti-Corruption Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 8/2023 Date: நாள் 6.12.23

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) of PC
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iii) Act சட்டம்: Cr.p.c Sections பிரிவுகள்: 102 Crpc
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 04.12.2023
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.12.2023 & Time : நேரம் 06.12.2023 @ 12.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III 2023 Time : நேரம் 06.12.2023 @ 12.30 hrs & 14.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக – written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் – O/o the Town panchayat, odugathur, vellore District about 40 kms Southwest
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Saravanamuthu (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Venkatachalam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.11.1970 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் Deputy Inspection cell officer (g) Address : முகவரி Inspection cell office, Collectorate, Sathuvachari, vellore-9.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. P. Ramu (52/2023) S/o Pachai milagai, Executive officer, odugathur Town panchayat, Anaicut Taluk, Vellore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the Investigation / directed ..........—.......... Rank ..........—.......... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........—..........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..........—.......... பதவி ..........—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........—.......... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(signature) 6/12/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 6/12/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்.
06.12.2023 @ 15.00 Hrs

Name: பெயர் .......... S. SANKAR
Rank: நிலை .......... No. எண் ..........
DEPUTY SUPERINTENDENT OF POLICE
VIGILANCE & ANTI-CORRUPTION,
VELLORE

**Submitted:**

**Column (12) in Vellore Vigilance and Anti Corruption Crime No.08/2023 u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 102 Cr.P.C.,**

| எதிரி | இன்று 06.12.2023 பகல் 12.30 மணிக்கு வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய ஆஜரில் இருந்தபோது வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.சரவணமுத்து அவர்கள் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று பார்க்க அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் V. சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா,நான் வேலூர் |
|---|---|
| திரு.P.ராமு, வயது.52/2023<br>த/பெ.பச்சைமிளகாய்<br>செயல் அலுவலர்<br>ஒடுக்கத்தூர் முதல் நிலை பேரூராட்சி<br>அணைக்கட்டு தாலுக்கா<br>வேலூர் மாவட்டம்<br><br>இருப்பிட முகவரி:<br><br>எண்.220, அம்மையப்பா நகர்,<br>பக்கிரிதக்கா, ஜோலார்பேட்டை<br>திருப்பத்தூர் மாவட்டம் | |

இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு துணை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக உள்ளேன். கடந்த 04.12.2023-ஆம் தேதி காலை 09.30 மணியளவில், நான் பணியில் இருந்தபோது, வேலூர் மாவட்டம் ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் செயல் அலுவலர் திரு.ராமு என்பவர் கடந்த 6 மாதங்களாக ஒடுக்கத்தூர் பேரூராட்சியில் செய்ய வேண்டிய அடிப்படை பணிகளை செய்யாமல் குறிப்பிட்ட தனியார் நிறுவனம் மற்றும் கடை உரிமையாளர்களிடமிருந்து போலியான பில் பெற்று, கடை உரிமையாளர்களுக்கு பொருட்கள் மற்றும் உபகரணங்களை வாங்கமலேயே வாங்கியது போல கணக்குகாட்டி சம்மந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்படுவதாகவும், கடை உரிமையாளர்கள் வங்கியில் காசோலையை பணமாக்குவதற்கு முன்பாகவும், சிலரிடம் காசோலையை பணமாக்கிய பின்பும் அவர்களுக்கு உண்டான கமிஷன் தொகையை லஞ்சமாக கொடுத்துவிட்டு மீதித்தொகையை மேற்படி திரு.ராமு எடுத்து கொள்வதாகவும், அவர் பொறுப்பு ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து தற்போது வரை இவ்வாராக சுமார் ரு.30,00,000/-ம் பேரூராட்சியின் கணக்கில் இருந்து எடுக்கப்பட்டதாகவும், இதுசம்மந்தமாக ஒடுக்கத்தூர் பேரூராட்சியின் வார்டு உறுப்பினர்கள் முறையிட்டதாகவும், மேற்படி வார்டு உறுப்பினர் எவ்வித கேள்வியும் கணக்கு கேட்காமல் இருப்பதற்காக நேற்று 04.12.2023 ஒடுக்கத்தூர் வார்டு உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட தொகையை லஞ்சமாக பணம் கொடுக்க இருப்பதாக நம்பகமான தகவல் கிடைத்தது. கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலை தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக்காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளருக்கு பகல் சுமார் 10.00

மணிக்கு தெரியப்படுத்திய பின் நேற்று 04.12.2023-ஆம் தேதி சுமார் 10.30 மணிக்கு வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு துணை அலுவலராகிய நான் மற்றும் வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, துணைக்காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினருடன் புறப்பட்டு பகல் சுமார் 12.00 மணிக்கு ஒடுக்கத்தூர் முதல் நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு இருதுறை திடீர் சோதனை செய்ய சென்று நான் மற்றும் குழுவினருடன் அலுவலகத்திற்கு உள்ளே சென்று அலுவலகத்தில் இருந்தவர்களை ஆங்காங்கே அவரவர் இருக்கும் இடத்திலேயே இருக்குமாறு அறிவுறுத்தி இருதுறை திடீர் சோதனைக்குழுவினர் அடையாள அட்டையை காண்பித்து எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு எங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்று சுயபரிசோதனை செய்து காண்பிக்கப்பட்டது. ஒடுக்கத்தூர் முதல்நிலை பேருராட்சியின் செயல் அலுவலர் யாரென்று விசாரிக்க, அலுவலகத்தின் செயல் அலுவலர் என்று எழுதப்பட்டு இருந்த அறையிலிருந்த நபர் தான்தான் செயல் அலுவலர் என்றும், தன்னுடைய பெயர் ராமு என்றும், செயல் அலுவலராக கடந்த 07.06.2023 முதல் ஒடுக்கத்தூர் முதல்நிலை பேருராட்சியின் செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார், அவரை சோதனை செய்ய அவரிடம் பணம் ரூ.370/- இருந்தது அவர் தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது. அதே அறையில் இருந்த பிற நபர்களை விசாரிக்க (1) திரு.A.பாஸ்கரன், த/பெ.அண்ணாமலை, No.63, 2வது வணிகர் தெரு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் 4-வது வார்டு கவுன்சிலர் என கூறியவரை சோதனை செய்ய அவரின் வலது மற்றும் இடது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணம் ரூ.55,730/- இருந்தது, அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் ரூ.730/-க்கு தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது, மீதும் உள்ள பணம் ரூ.55,000/- பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. (2) திரு. N.சிலம்பரசன், த/பெ.நாராயணசாமி, No.35/20, 7-வது தெரு, "ஓ" ராஜபாளையம், ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம், 8-வது வார்டு கவுன்சிலர் என கூறியவரை சோதனை செய்ய அவரின் வேட்டியின் உள்ளே அணிந்திருந்த டிரவுசரின் வலது பக்க பாக்கெட்டில் பணம் ரூ.10,200/- இருந்தது, அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் ரூ.200/- க்கு தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது, மீதும் உள்ள பணம் ரூ.10,000/- பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. (3) திரு.L.வினித்கௌதம், த/பெ.லோகநாதன், No.29/9C, ஆத்துமேடு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம், 14-வது வார்டு கவுன்சிலர் என கூறியவரை சோதனை செய்ய வேட்டியின் உள்ளே அணிந்திருந்த டிரவுசரின் வலது பக்க பாக்கெட்டில் பணம் ரூ.10,040/- இருந்தது, அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் ரூ.40/-க்கு தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது, மீதும் உள்ள பணம் ரூ.10,000/-க்கு பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. (4) திரு.V.S.பிரபுராம், த/பெ.சங்கரன், No.25, ராமர் பஜனை கோயில் தெரு, வேலப்பாடி, வேலூர் சப்ளையர் என்று கூறியவரை சோதனை செய்ய அவரின் சட்டையின் இடதுபக்க மேல் பாக்கெட்டில் பணம் ரூ.4,600/- இருந்தது, அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் ரூ.600/-க்கு தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது, மீதும்

உள்ள பணம் ரூ.4,000/-க்கு பதில் எதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. (5) திரு. T.K.ரமேஷ், த/பெ.காசி, No.29, அம்பேத்கார் கிளை தெரு. கழிஞ்சூர், காட்பாடி, வேலூர் மாவட்டம் Sanitary Supervisor என்று கூறியவரை சோதனை செய்ய அவரின் சட்டையின் இடதுபக்க மேல் பாக்கெட்டில் பணம் ரூ.3,130/- இருந்தது, அப்பணம் குறித்து அவரிடம் கேட்க, அவர் ரூ.130/-க்கு தக்க முகாந்திரம் கூறியதால் அப்பணம் அவரிடம் திருப்பிகொடுக்கப்பட்டது, மீதும் உள்ள பணம் ரூ.3,000/-க்கு பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார், அதனால் அத்தொகை கைப்பற்றப்பட்டது. மேற்படி தொகை கைப்பற்றப்பட்ட நபர்கள் தனித்தனியே அவர்கள் வைத்திருந்த தொகை குறித்து வாக்குமூலம் எழுதி கொடுத்தனர், அதில் கவுன்சிலர்கள் தங்களை செயல் அலுவலர் அழைத்து பணம் ரூ.10,000/-ம் கொடுத்ததாக எழுதி கொடுத்தனர். மேலும் செயல் அலுவலர் அமர்ந்திருந்த மேஜை மற்றும் மேஜையில் இருந்த டிராயர்களை சோதனை செய்ய மேஜையின் மீது போடப்பட்டிருந்த துணிக்கு கீழே கத்தையாக 500 ரூபாய் தாள்கள் இருந்தது. அப்பணம் குறித்து செயல் அலுவலர் திரு.ராமு அவர்களிடம் விசாரிக்க, அதற்கு அவர் அப்பணம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் அப்பணம் தன்னுடையது இல்லை என்றும் தெரிவித்தார். அத்தொகையை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.36,000/- இருந்தது. உரிமை கோராத மற்றும் தக்க முகாந்திரம் ஏதும் தெரிவிக்காத அத்தொகை வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. செயல் அலுவலரின் மேஜையை சோதனை செய்ய அதன் இழுவறையில் S.R. AGENCIES, No.B2/5, CMC Colony, 3rd street, Sathuvachari, Vellore என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 8 பில்கள், STAR ENTERPRISES, Hardwares & Electricals, Plumbing Materials & Public Health Materials & Public Health Materials, Door No.185, Nehru Nagar, Sathuvachari, Vellore-632009 TN என்ற நிறுவனத்தின் Bill of Supply தேதி குறிப்பிடபடாமல் 2 பில்கள், S.LOGANATHAN, Logu Plumbing Works, No.4, L.F.Road, Kalpudur, Katpadi, Vellore District-632007 என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 6 பில்கள் மற்றும் 2 Stamp Receipt-கள், Sri Kanna Electricals & Hardwares, No.78A, New Vellore Main Road, Anna Salai Bus Stop Opp. Arcot-632503 (Rpt. Dt.) என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 14 பில்கள் மற்றும் 5 Stamp Receipt-கள், Sivam Traders, No.10, G.V.Complex, Anna Salai, Arcot-632503, Ranipet District, என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 8 பில்கள், Pooja Traders, No.53/96, Dharmaraja Kovil Street, Arcot-632503, Vellore District, என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 6 பில்கள், Seenu Traders, No.26, C/7, Vellore Main Road, Anna Nagar-3, (Green Thunder Road), Arcot-632503, Ranipet Dist., என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 6 பில்கள், V.R.ENTERPRISES, No.17/22, K.R.K. Street, Cheyyar-604407, T.V.Malai Dist., என்ற நிறுவனத்தின் Credit Bill தேதி குறிப்பிடபடாமல் 5 பில்கள், ஸ்ரீ அம்மன் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், நெ.1, மாணிக்க முதலியார் தெரு, சந்து (CMC அவுட் கேட் எதிரில்) காட்பாடி ரோடு, வேலூர்-4 என்ற நிறுவனத்தின் எதுவும் நிரப்படாமல் பயன்படுத்தப்படாத 10 Cash Bill-கள், பூர்த்தி செய்யப்படாத Stamp Receipt –ல் Stamp ஒட்டப்பட்டு அதன் மீது For SHRI JAYAM AGENCIES-Proprietor என முத்திரையிடப்பட்டு அதில் கையொப்பம் செய்யப்பட்டுள்ள 18 Receipt-கள், பிற நிறுவனங்களின் பூர்த்தி செய்யப்படாத,

பயன்படுத்தப்படாத பில்கள் மற்றும் விலைப்புள்ளி பட்டியல்களில் 1) Cash Bill of Sri Yogeswari Earth Movers V.Saranya, Tractor Compressor & Dosar Service, Madayapattu Village, Serpadi Post, Odugathur-632103, 2) Log Sheet – ஸ்ரீ முனீஸ்வரர் எர்த் மூவர்ஸ், கெங்கசானிக்குப்பம் கிராமம், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம்-632103, 3) Log Sheet – வினாயகா எர்த் மூவர்ஸ், ஒடுக்கத்தூர், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம்-632103 (இரண்டு பில்கள்), 4) விஜய் செப்டிக் டேங்க் கிளினிங் சர்வீஸ், உரிமை – E.சரிதா (இரண்டு பில்கள்), 5) Cash Bill – ஸ்ரீ லக்ஷ்மி சவுண்டு சர்வீஸ் சப்ளையர்ஸ் ஷ லைட்செட்டிங், பஸ்ரோடு, அண்ணா நகர், ஒடுகத்தூர், அனைகட்டு தாலுக்கா, வே.மா.632103 (இரண்டு பில்கள்), 6) Estimate- ஸ்ரீ சீனிவாச எலக்ட்ரிக்கல்ஸ், 153D/32-6, பஸ் ரோடு, ஒடுகத்தூர்-632103, வேலூர் மாவட்டம், 7) Letter pad - ஸ்ரீ கிருஷ்ணா எர்த் மூவர்ஸ், லாரி & டிராக்டர் சர்வீஸ், 79/43, வணிகர் தெரு, ஒடுக்கத்தூர்-632103 (இரண்டு லட்டர் பேடுகள்), 8) Letter pad - FOGG TECH, Plot No.43, School Street, Rangapuram, Vellore-632009. PRABHU ARTS No.25, Ramar Bajanai Koil Street, Velapadi, Vellore-632001, Vellore Dt, Cash Bill, தேதி குறிப்பிடபடாமல் உள்ள 1 பில், BANK PAYMENT VOUCHERS 10 நிறுவனங்களின் பில்கள் இருந்தன இதுகுறித்த முழுவிவரங்கள் திடீர் கூட்டு சோதனையின்போது தயாரிக்கப்பட்ட செயல்முறையில் விரிவாக குறித்துக்கொள்ளப்பட்டு அவை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேலும் ஒடுக்கத்தூர் முதல்நிலை பேருராட்சியில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலக ஊழியர்கள் மற்றும் தனி நபர்களான 1) C.மாரிராஜன், த/பெ.சின்னராஜ், No.25, 'ஓ' ராஜபாளையம், ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம், (தனி நபர்) 2) K.பாபு, த/பெ.கண்ணன், அருகந்தம்பூண்டி பெரிய தெரு, தோட்டப்பாளையம், வேலூர் (தனி நபர்) 3) P.ஏகாம்பரம், த/பெ.பெருமாள் கவுண்டர், No.50, பிள்ளையார் கோயில் தெரு, K.G.ஏரியூர், 96 போஸ்ட், வழி-ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் (தனி நபர்) 4) A.வெங்கடேசன, த/பெ.அருணாசலம், No.74B/46, 'ஓ' ராஜபாளையம் ரோடு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் (தனி நபர்) 5) S.வெங்கடேசன், த/பெ.சொல்லைகான், No.33, அண்ணா நகர், ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் (3-வது வார்டு கவுன்சிலர் திருமதி. ஜெயந்தி அவர்களின் கணவர்) 6) K.சௌளரிராஜன், த/பெ.K.குப்புசாமி, No.1/3, கிடங்கு தெரு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் (11-வது வார்டு கவுன்சிலர் திருமதி.S.புனிதா அவர்களின் கணவர்) 7) மதன்குமார், த/பெ.சேட்டு, No.18, முனிசாமி சுபேதார் தெரு, பென்னாத்தூர், வேலூர் மாவட்டம் (ஓட்டுனர்) 8) மகாதேவன், த/பெ.லட்சுமணன், வெங்கனப்பாளையம், ஒடுகத்தூர், வேலூர் (துய்மை பணியாளர் மற்றும் வரி வசூல் செய்பவர்) 9) வேலு, த/பெ நாகராஜன், No.32/74, கொட்டாவூர் கிராமம், ஒடுகத்தூர் அணைகட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் (மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர், கல்லுட்டை) 10) வெங்கடேசன், த/பெ.சீனிவாசன், No.32A, கொட்டாவூர் கிராமம், ஒடுகத்தூர் வேலூர் மாவட்டம் (துய்மை பணியாளர்) 11) G.தாமேதரன், த/பெ.கோவிந்தசாமி, No.10D, வெங்கனப்பாளையம், ஒடுகத்தூர் போஸ்ட், வேலூர் மாவட்டம் (Electrician -Daily Wages) 12) M.கார்த்திக், த/பெ.மனோகரன், No.27, 'ஓ' ராஜபாளையம், ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் (OHT-Daily wages) 13) C.கோவிந்தன், த/பெ.சின்னப்பன், No.4, G.கோட்டை கிராமம், கருங்காலி போஸ்ட், முகமதுபுரம், அணைகட்டு, வேலூர் மாவட்டம் (Sweeper -Daily wages), 14) R.விஷ்னுபிரியன், த/பெ.A.ரமேஷ், No.7A, 2nd வணிகர் தெரு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம்

(Technical Assistant to JE-Daily wages) மேற்சொன்ன அலுவலக ஊழியர்கள் மற்றும் தனி நபர்கள் வசம் இருந்த பணம் குறித்த விசாரித்து அவர்கள் தக்க முகாந்திரம் மற்றும் தங்கள் வசம் உள்ள தொகை குறித்து முறையாக கணக்கு கூறியதால் அத்தொகை அவர்கள் வசம் திருப்பிகொடுக்கப்பட்டது. ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சி அலுவலக ஹால் தென்மேற்கு மூலையில் தெற்குப்பக்க சுவற்றினை ஒட்டியவாறு டேபிள் மற்றும் நாற்காலி போடப்பட்டிருந்தது. அந்த டேபிளினை சோதனை செய்ய டேபிளின் மேஜை விரிப்புக்கு அடியில் கத்தையாக 500 ரூபாய் தாள்கள் இருந்தது. அப்பணம் குறித்து ஆஜரில் இருந்த செயல் அலுவலர், அலுவலக ஊழியர்களிடமும் மற்ற தனிநபர்களிடமும் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோரவில்லை பணத்தினை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் பணம் ரூ.50,000/- இருந்தது. உரிமைகோராத கேட்பாரற்று கிடந்த அத்தொகை வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருக்கை குறித்து செயல் அலுவலர் திரு.ராமு அவர்களிடம் விசாரிக்க அந்த இருக்கையானது இளநிலை உதவியாளர் திருமதி.தீபா அவர்கள் அமரும் இருக்கை என்றும், அவர் இன்று அலுவலகத்திற்கு வரவில்லை என்றும் Monday Petition பணியாக வேலூர் கலெக்டர் அலுவலகம் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார். ஒடுகத்தூர் பேரூராட்சி அலுவலக கணினி அறையில் 1) R.சாந்தி க/பெ.கோவிந்தசாமி, No.40/17, 2nd தெரு, "ஓ"ராஜபாளையம், ஒடுகத்தூர், வேலூர், 2) S.பவித்ரா, த/பெ.சுப்பிரமணி, இசை நகர், 1-வது தெரு, ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம், 3) ரஞ்சிதம், க/பெ.சண்முகசுந்தரம், No.17/7B, பிள்ளையார் கோயில் தெரு, கல்லுடை கிராமம், ஒடுகத்தூர், வேலூர் மாவட்டம் ஆகியோர் இருந்தனர் அவர்கள் வைத்திருந்த மணிபர்ச்சினை மட்டும் எடுத்து காண்பிக்க சொல்லிவிட்டு அவர்களின் விவரம் குறித்து கொள்ளப்பட்டு பகல் 14.00 மணிக்கு வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. செயல் அலுவலர் திரு.ராமு அவர்களை விசாரணை செய்து அவர் தெரிவித்த விவரங்களை இருதுறை திடீர் சோதனை செயல்முறையில் பதிவு செய்யப்பட்டது. செயல் அலுவலர் Star Agency, Vasu & Co, SR Agency, Sri Kannan Electricals, Srinivasa Electricals and Tr.S.Loganathan, S.Karthick, Tr.Balasubramani, Tr.Praburaman, Tr.Vinayagamoorthy (JCB Operator), Tr.MadhuKumar, Divya Metal, Ganesh Traders, Coimbatore District Printers மற்றும் சில நிறுவனங்கள் மூலமாகவும், நபர்கள் மூலமாகவும் பொது சுகாதாரம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு தேவையான பொருட்களை வாங்குவதாகவும், தான் ஒடுக்கத்தூர் செயல் அலுவலராக பொறுப்பேற்றது முதல் தற்போதுவரை பெருமளவு தொகையை மேற்சொன்ன நிறுவனங்களுக்கு மற்றும் நபர்களுக்கு வழங்கியுள்ளதாகவும் கூறினார். அவரது அறையில் கைப்பற்றப்பட்ட நிறுவனங்களின் இரசீதுகள் குறித்து கேட்க பதில் ஏதும் கூறாமல் அமைதியாக இருந்தார். மீண்டும் அந்த இரசீதுகள் குறித்து விசாரிக்க தொடர்ந்து மௌனமாகவே இருந்தார். மேலும் செயல் அலுவலர் திரு.ராமு அவர்களிடம் ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சியில் பயன்படுத்தப்பட்டு வரும் வங்கிகணக்கு விவரங்கள் அடங்கிய தாள் ஒன்றினை கையொப்பம் செய்து ஆஜர் செய்தார். ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சியின் தினப்பேரேடு கேட்டுப்பெற்று பார்க்க அதில் 24.11.2023 அன்றைய தேதிக்கு பிறகு பதிவுகள் மேற்கொள்ளாமல் உள்ளது குறித்தும் மாதாந்திர அட்டவணை எழுதப்படாமல் உள்ளது குறித்தும் செயல் அலுவலர் திரு.ராமு அவர்களிடம் கேட்க பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தார் வழக்கு நிமித்தம் தினப்பேரேடு கைப்பற்றப்பட்டது. ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சி அலுவலக பதிவேடுகளான 1) ஒடுக்கத்தூர் பேரூராட்சி அலுவலக பணியாளர்கள்

வருகை பதிவேடு, 2) ஒடுக்கத்தூர் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் வருகை பதிவேடு, 3) செயல் அலுவலர் அவர்களின் நாட்குறிப்பு பதிவேடு, 4) தெரு மின்விளக்கு உதிரி பாகங்கள் பதிவேடு, 5) பொது சுகாதார பொருட்கள் இருப்பு பதிவேடு, 6) குடிநீர் பொருட்கள் இருப்பு பதிவேடு ஆகிய பதிவேடுகளை கேட்க அவர் ஆஜர் செய்ததை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூற இயலாத, கணக்கு காட்ட இயலாத மற்றும் யாரும் உரிமை கோராத பணம் ரூ.1,68,000/- மற்றும் ஆவணங்கள் வழக்கு நிமித்தமாக கைப்பற்றப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை சம்மந்தமான விரிவான செயல்முறை 04.12.2022 பகல் 12.00 மணி முதல் தயார் செய்யப்பட்டு 19.15 மணிக்கு முடிக்கப்பட்டு அதன் நகல் திரு.ராமு, செயல் அலுவலர், ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சி, ஒடுக்கத்தூர், வேலூர் மாவட்டம், அவர்களுக்கு வழங்கி ஒப்புதல் பெறப்பட்டது. ஒடுக்கத்தூர் பேரூராட்சியில் செய்ய வேண்டிய அடிப்படை பணிகளை செய்யாமல் குறிப்பிட்ட தனியார் நிறுவனம் மற்றும் கடை உரிமையாளர் ஆகியோரிடம் இருந்து போலியான பில் பெற்று, கடை உரிமையாளர்களுக்கு பொருட்கள் மற்றும் உபகரணங்களை வாங்கமலேயே வாங்கியது போல கணக்குகாட்டி சம்மந்தப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு காசோலைகள் வழங்கியும், கடை உரிமையாளர்கள் வங்கியில் காசோலையை பணமாக்குவதற்கு முன்பாகவும், சிலரிடம் காசோலையை பணமாக்கிய பின்பும் அவர்களுக்கு உண்டான கமிஷன் தொகையை ஒடுகத்தூர் முதல் நிலை பேரூராட்சியின் நிதியில் இருந்து லஞ்சமாக கொடுத்துவிட்டு பெருமளவு மீதித்தொகையை பேரூராட்சியின் நிதியில் இருந்து எடுத்து கொள்ளும் திரு.ராமு, செயல் அலுவலர், ஒடுக்கத்தூர் முதல்நிலை பேரூராட்சி, ஒடுக்கத்தூர், வேலூர் மாவட்டம் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.1,68,000/-யும் கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு சோதனையின் போது தயார் செய்யப்பட்ட 04.12.2023 நாளிட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் உரிய நடவடிக்கைக்காக ஒப்புவிக்கிறேன். sd/- xxxxxx, 06.12.2023 V.சரவணமுத்து, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9

Sir,

Received the complaint on 6.12.2023 at 12.30 hrs. and registered a case in Vellore Vigilance and Anti-Corruption Cr.No.08/2023, u/s 7(a) of Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w. 102 CrPC on 06.12.2023 at 14.00 Hrs. Sd/- xxxxx 6/12/2023 (S.SANKAR), DSP/V&AC/VL

The original First Information Report along with complaint of Tr.V.Saravanamuthu, Deputy Inspection Cell Officer dated 06.12.2023 and Original Joint Surprise Check Proceedings dated 04.12.2023 is submitted to the Hon'ble Special Judge/Chief Judicial Magistrate, Vellore and copy of the First Information Report is sent to the officers concerned.

[signature] 6/12/2023
(S.SANKAR)
DSP/V&AC/VL